www.Padasalai.Net www.CBSEtips.in

TSI12T

**தென்காசி மாவட்டப் பொதுத் தேர்வுகள்**
**காலாண்டுப் பொதுத் தேர்வு - செப்டம்பர் 2022**

**வகுப்பு 12**

நேரம்: 3.00 மணி **பொதுத்தமிழ்** மொத்த மதிப்பெண்கள்: 90

**குறிப்பு:** விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

**பகுதி - I**

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக:** **14×1=14**

1) இலக்கியத்தையும் மொழியையும் ஒரு சேரப் பேசுகின்ற இலக்கணநூல்
அ) யாப்பருங்கலக்காரிகை ஆ) நன்னூல்
இ) தண்டியலங்காரம் ஈ) தொல்காப்பியம்

2) **பொருத்துக:**

| | | |
|---|---|---|
| அ) தமிழ் அழகியல் | - | 1. பரலி சு. நெல்லையப்பர் |
| ஆ) நிலவுப்பூ | - | 2. தி.சு. நடராஜன் |
| இ) கிடை | - | 3. சிற்பி பாலசுப்பிரமணியன் |
| ஈ) உய்யும் வழி | - | 4. கி. ராஜநாராயணன் |

அ) 4, 3, 2, 1 ஆ) 1, 4, 2, 3 இ) 2, 4, 1, 3 ஈ) 2, 3, 4, 1

3) தமிழில் திணைப்பாகுபாடு ............. அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது.
அ) பொருட்குறிப்பு ஆ) சொற்குறிப்பு
இ) தொடர்குறிப்பு ஈ) எழுத்துக்குறிப்பு

4) நெடுநல்வாடை என்பது ............. நூல்கள் ஒன்று.
அ) எட்டுத்தொகை ஆ) பத்துப்பாட்டு இ) சிறுகாப்பிய ஈ) பெருங்காப்பிய

5) பொய்யாவானம் - இலக்கணக்குறிப்பு
அ) வினைத்தொகை ஆ) உரிச்சொற்றொடர்
இ) பண்புத்தொகை ஈ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

6) உவாஉற வந்து கூடும்
உடுபதி இரவி ஒத்தார் - யார் யார்?
அ) சடாயு, இராமன் ஆ) இராமன், குகன்
இ) இராமன், சுக்ரீவன் ஈ) இராமன், சவரி

7) இவற்றை வாயிலுக்கே சென்று இன்முகத்துடன் வரவேற்பாயாக என்று ஜலாலுதீன் ரூமி குறிப்பிடுவது
அ) வக்கிரம் ஆ) அவமானம்
இ) வஞ்சனை ஈ) இவை அனைத்தும்

8) சுவடியோடு பொருந்தாத ஒன்றைத் தேர்க.
அ) வசம்பு ஆ) கடுக்காய்
இ) மாவிலைக்கரி ஈ) மணத்தக்காளியிலைச் சாறு

9) பரிசில்துறை என்பது .............
அ) பரிசில் பெற பாடல் பாடுவது ஆ) பரிசில் பெற்று வீடு திரும்புவது
இ) பரிசில் வேண்டி வாயிலில் நிற்பது ஈ) பரிசில் பெற ஆற்றுப்படுத்துவது

10) 'தலைக்குளம்' என்ற சிறுகதையின் ஆசிரியர்
அ) புதுமைப்பித்தன் ஆ) உத்தமசோழன்
இ) பூமணி ஈ) தோப்பில் முகமது மீரான்

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in


11) **புணர்ச்சி விதி தருக:** பெருங்கடல்

அ) ஈறுபோதல், முன்னின்ற மெய்திரிதல் ஆ) ஈறுபோதல்

இ) ஈறுபோதல், இனமிகல் ஈ) ஈறுபோதல், தன்னொற்றிரட்டல்

12) ஓட்டுநர் உரிமம் இல்லாமல் ஊர்தியை இயக்கினால் வழங்கப்பட வேண்டிய தண்டத்தொகை

அ) 5000 ஆ) 10000 இ) 2000 ஈ) 1000

13) 'உனது கடமையாகக் கொள்' என பாரதி கூறுவது யாது?

அ) சமுதாயம் காப்பது ஆ) கல்வியை வளர்ப்பது

இ) தமிழை வளர்ப்பது ஈ) உயிரை வளர்ப்பது

14) நரம்புகளுக்குள் வீணை மீட்டிக் கொண்டிருக்கிறது என்று அய்யப்ப மாதவன் குறிப்பிடுது

அ) சூரிய ஒளிக்கதிர் ஆ) மழைமேகங்கள்

இ) மழைத்துளிகள் ஈ) நீர்நிலைகள்

## பகுதி - II

### பிரிவு - 1

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக:** **3×2=6**

15) கவிஞர் சிற்பி எவற்றை வியந்துபாட தமிழின் துணை வேண்டும் என்கிறார்?

16) குளிரின் கொடுமையால் உயிரினங்கள் பட்ட துன்பத்தைக் கூறுக.

17) ஞாலத்தின் பெரியது எது?

18) எத்திசையிலும் சோறு தட்டாது கிட்டும் - யார்க்கு?

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்கவும்:** **2×2=4**

19) புக்கில், தன்மனை - சிறுகுறிப்பு வரைக.

20) அக்காலத்துக் கல்வி முறையில் மனனப் பயிற்சிக்கு உதவிய நூல்கள் யாவை?

21) கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் குறித்து எழுதுக.

### பிரிவு - 3

**எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும்:** **7×2=14**

22) முடிந்தால் தரலாம், முடித்தால் தரலாம் - இவ்விரு சொற்றொடர்கள் உணர்த்தும் பொருளை அறிந்து தொடர் அமைக்கவும்.

23) **மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக:**

அ) கோவலன் மதுரைக்குச் சென்றது.

ஆ) நாய் கத்தியதால் ஆடுகள் பிளிறின.

24) **ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக:**

அ) திகழ்ந்த ஆ) அமர்ந்தனன்

25) **பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்ச்சொற்களை எழுதுக:**

அ) Passport ஆ) Arrival

26) **ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சியிலக்கணம் தருக:**

அ) பூம்பாவாய் ஆ) புதுப்பெயல்

27) **தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக:**

அ) எங்கள் ஊரில் நூலகக் கட்டிடம் கட்ட அறசு நிதி ஒதுக்கியது.

ஆ) ரவைக்கு சித்தப்பன காவலுக்குப் போவ சொல்.

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in



28) **வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக:**

என்னுடைய நம்பிக்கை முழுவதுமே புதியத் தலைமுறை மீது தான்; அவர்கள் பிரச்சினைகளையும் ஒரு சிங்கத்தை போல எதிர்கொண்டுத் தீர்ப்பார்கள்.

29) **மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக:**

கலை, களை

30) **உவமைத் தொடரைச் சொற்றொடரில் அமைத்து எழுதுக:**

எலியும் பூனையும் போல

## பகுதி - III

### பிரிவு - 1

**ஐந்து அல்லது ஆறு வரிகளில் எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடையளிக்கவும்:** 2×4=8

31) 'ஏங்கொலி நீர் ஞாலத்து இருளகற்றும்' - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

32) எவற்றையெல்லாம் விட நன்றி உயர்ந்தது? குறள்வழி விளக்குக.

33) இராமலிங்க அடிகள் கந்தவேளிடம் எத்தகையோர் உறவு வேண்டுமெனக் கேட்கிறார்?

34) மூன்றான காலம் போன்று ஒன்று - எவை? ஏன்? விளக்குக.

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடையளிக்கவும்:** 2×4=8

35) பேரிடர் மேலாண்மை ஆணையம் - விளக்குக.

36) பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே இன்றைய கூட்டுக்குடும்பம் எவ்வாறு?

37) மையாடல் விழா என்றால் என்ன?

38) சென்னையின் பண்பாட்டு அடையாளங்களில் இன்றும் நிலைத்து இருப்பனவற்றைக் குறிப்பிடுக.

### பிரிவு - 3

**எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக:** 3×4=12

39) சொற்பொருள் பின்வருநிலையணி **(அல்லது)** உவமை அணியைச் சான்றுடன் விளக்குக.

40) **இலக்கிய நயம் பாராட்டுக: மையக்கருத்துடன் மூன்று நயங்களை எழுதுக:**

பிறப்பினால் எவர்க்கும் - உலகில்
பெருமை வாராதப்பா,
சிறப்பு வேண்டுமெனில் - நல்ல
செய்கை வேண்டுமப்பா!
நன்மை செய்பவரே - உலகம்
நாடும் மேற்குலத்தார்!
தின்மை செய்பவரே - அண்டித்
தீண்ட ஒண்ணாதார்

- **கவிமணி தேசிகவிநாயகம்**

41) **கீழ்க்காணும் பழமொழிகளில் ஏதேனும் ஒன்றினை வாழ்க்கை நிகழ்வோடு பொருத்தி எழுதுக:**

அ) இளங்கன்று பயமறியாது

ஆ) எறும்பு ஊரக் கல்லும் தேயும்

42) பொன்மாலைப்பொழுது **அல்லது** வெண்ணிலா என்னும் தலைப்பில் மரபு / புதுக்கவிதை ஒன்றை எட்டு வரிகளுக்குக் குறையாமல் எழுதுக.

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in



43) **தமிழாக்கம் தருக:**

அ) A new language is 9 new life.

ஆ) Learning is treasure that will follow its owener everywhere.

இ) Education is the most powerful weapon, which you can use to change the world.

ஈ) The pen is mightier than the sword.

43) **காதுகேளாத மாணவர்களுக்கான மாற்று வினா:**

**கீழ்க்காணும் பத்தியைப் படித்து நான்கு வினாக்களை உருவாக்குக:**

மொழி என்பது மக்கள் படைத்துக் காக்கும் அரியதொரு கலை. மொழியே மக்களின் அறிவை வளர்த்து உயர்த்தும் அரிய கருவியாகவும் உள்ளது. பெற்ற தாயின் முதல் வேட்கை தன் குழந்தையுடன் பேசுதல். அவள் முதலில் அடையும் மகிழ்ச்சி குழந்தையின் பேச்சைக் கேட்பதே ஆகும். குழந்தையின் மனவளர்ச்சியோடு தொடர்புடையது மொழிவளர்ச்சியே ஆகும். மனம் என்பது பெரும்பாலும் மொழியால் வளர்ந்து அமைந்தது. மனத்தின் வளர்ச்சிக்கு ஏற்பவே பேசுவோரின் மொழியும் வளர்ச்சி பெற்று நிற்கும்.

## பகுதி - IV

**பின்வரும் வினாக்களுக்கு இரு பக்கங்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்:** **3×6=18**

44) பண்பின் படிமமாகப் படைக்கப்பட்ட இராமன் பிற உயிர்களுடன் கொண்டிருந்த உறவு நிலையைப் பாடப்பகுதி வழி நின்று விளக்குக.

**(அல்லது)**

சினத்தைக் காத்தல் வாழ்வை மேன்மைப்படுத்தும் - இக்கூற்றை முப்பால் வழி விரித்துரைக்க.

45) கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளை எடுத்துக்காட்டி விளக்குக.

**(அல்லது)**

'ஒவ்வொரு நகரத்துக்கும் வரலாறும் வடிவழகும் உண்டு' நீங்கள் பார்த்த அல்லது வாழ்ந்த ஒரு நகரம் குறித்து கட்டுரை எழுதுக.

46) பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊரைத் தன் பொறுப்புணர்வால் மாற்றிய மருதனின் பண்புநலத்தை விளக்குக.

**(அல்லது)**

'சாலை விபத்து இல்லாத தமிழ்நாடு' இக்கூற்று நனவாக நாம் செய்ய வேண்டியன யாவை?

## பகுதி - V

**அடிமாறாமல் செய்யுள் வடிவில் எழுதுக:** **4+2=6**

47) அ) 'விண்வேறு' - எனத் தொடங்கும் பாடல்.

ஆ) 'படும்' - என முடியும் திருக்குறள்.

---

முதுகலைத் தமிழாசிரியர், ஸ்ரீராம் மெட்ரிக் மே.நி.பள்ளி, வல்லம் 627809.

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593